ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1899/15 - 2015 ජනවාරි මස 28 වැනි බදාදා - 2015.01.28

1899/15 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 28 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் ( திருத்தச் ) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

குறிப்பு இல.: எல்டி/05/2005/ஈ/615.

ப/சொரகுணமகா வித்தியாலய தேவைகளுக்காக கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணி யிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப் பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:-**

ஊவா மாகாணத்தில், பதுளை மாவட்டத்தில், ஹல்தும் முல்லை பிரதேச செயலாளர் பிரிவில், கந்தபல்ல கோரளை சிறு பிரிவில், மெதவெல (157-எப்) ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் மஹவெலகம கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட இறுதி நிர்ணய புவியியல் வரைபட இல. 45 பிற்சேர்க்கை இல. 4, தாள் 5 மற்றும் 2008.12.31 ஆந் திகதி என குறிப்பிடப் பட்டுள்ள 0.2802 ஹெக்டயார் மொத்த விஸ்தீரணமுடைய காணித் துண்டுடின் விபரங்கள் பின்வருமாறு:-

**1. துண்டு இல.: 27**

காணியின் பெயர்: அம்பகஹவத்த கும்புர; விபரம்: திறந்த சேற்று நிலம்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்:சொரகுண சிறிய கதிர்காம தேவாலயம், ஹல்தும்முல்லை; விஸ்தீரணம்: 0.2802 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 02 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு ஹல்தும்முல்லை, பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்த தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2015 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஈ. எம். எஸ். பி. ஜயசுந்தர,
பிரதேசச் செயலாளர்,
ஹல்தும்முல்லை.

பிரதேச செயலகம்,
ஹல்தும்முல்லை,
2015, சனவரி 26.

2 - 351

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.